1972 ஆகஸ்ட் 19]

Cultivation of Sunflower

*108. Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Government are interested in the cultivation of sunflower as a commercial crop in the State; and

(b) if so, the details thereof?

சூரியகாந்தியை பயிரிடுதல்

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சூரிய காந்தியை ஒரு வணிகப் பயிராக விளைவிப்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) சூரியகாந்தி செய்முறை விளக்கத்திட்டம், மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டத்தில் ஒன்றாகத் தமிழ்நாட்டில் 1971-72-ல் ரூ. 48,000 மதிப்பீட்டுச் செலவில் 160 ஹெக்டேர் பரப்பளவில் செயல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வணிக அடிப்படையில் இச்செடியை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறு பற்றி ஆராயும் பொருட்டு, சூரியகாந்தி வளர்க்கப்பட்டுள்ள செய்முறை விளக்கப் பண்ணைகள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. முன் பருவப் பயிர் காலத்தில் நீர் பாய்ச்சாமல் இதன் விதைகள் செய்முறை விளக்கப் பண்ணைகளில் விதைக்கப்பட்டுள்ளன. பின் பருவப் பயிர் காலத்தில் நீர் பாய்ச்சி இச் செடியை வளர்ப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் நீர் பாய்ச்சாமலும் இச்செடியை வளர்க்கலாம் என்று தொடக்கச் சோதனைகளிலிருந்து தெரிய வருகிறது. எனினும், சோதனை முறையில் இதனை வளர்ப்பதைக் கவனித்தபின்னர் வணிக அடிப் படையில் இச் செடியை வளர்ப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

[1972 ஆகஸ்ட் 19

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த சூரிய காந்தி பூவிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது என்று கூறப் படுகிறது. அது வணிக விளைவு எண்ணெயா என்று தெரிந்து கொள்ள இயலுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர் களே, அந்த வித்திலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. அதை வணிகப் பொருள்களாக 'யூஸ்' பண்ணலாம்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, சூரிய காந்தி நன்றாக வளர்ச்சியடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து விதைகள் கொடுக்கப்பட்டு ரயத்துக்கள் அதைப் பயிர் செய்து அந்த வித்துக்களை வைத்திருக் கிறார்கள். அது எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே அதை விவசாயிகள் தங்களுடைய வீடுகளில் வைத்திருக்கிறார்கள். அருப்புக்கோட்டை தாலுக்காவில் விவசாயிகள் அந்தமாதிரி வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். உடனடியாக அந்த வித்துக்களை பஞ்சாயத்து யூனியன் மூலமாக அல்லது வர்த்தக ஸ்தாபனத்தின் மூலமாக வாங்கி உபயோகிக்கும்படியான ஏற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர் களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இப்போது தான் செய்தி வந்திருக்கிறது, அதற்கான ஏற் பாடுகள் செய்யப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் எப்படி அந்த எண்ணெயைப் பயன் படுத்துகிறார்கள் என்று கேட்டார்கள். பொதுவாக சர்க்கரை வியாதியுள்ளவர்கள், கொழுப்பு சத்து சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று விரும்புகிறவர்கள். எண்ணெயில் வருத்துச் சாப்பிடாமல் இருக்க ஆசைப்படுகிறவர்கள், அந்த எண்ணெயில் வருத்துச் சாப் பிடலாம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். அதற்கு நல்ல முறையில் பயன்படுகிறது. மேலை நாடுகளில் அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேலும் அந்த விதைகளை நேரடியாகவே ஆகாரமாக, தித்திப்புப் பண்ட மாக, வேறுவிதமான உணவுப் பண்டங்களாக செய்து உட்கொள்ள

1972 ஆகஸ்ட் 19]

லாம் என்று பல இடங்களில் செய்து காட்டப்படுகிறது. அது உடலுக்கும் நல்லது, குழந்தைகளுக்கும் நன்கு பயன்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, பம்பாயிலிருந்து வருகிற ' சபோலா ' இதே எண்ணெய் தானா ? தெரியாததால் இங்கு வடநாட்டிலிருந்து எண்ணெய் வரவழைக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதே எண்ணெய் தான்.

Cultivation of Saffron

* 109. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether steps have been taken by the Agriculture Department to cultivate saffron in this State; and

(b) if so, the details thereof?

குங்குமப்பூ பயிரிடுதல்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் குங்குமப்பூ பயிரிட வேளாண்மைத் துறை முயற்சி எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) உதகமண்டலத்திலும் கோடைக்கானலிலுள்ள பிரையன்ட் பூங்காவிலும் அமைந்துள்ள அரசு விதைப்பண்ணைகளில் குங்குமப்பூ பயிரிடுவதற்கான சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நடத்தப்பட்டுள்ள சோதனைகளின் முடிவுகள் தெரியவந்த பின்னரே, குங்குமப்பூ பயிரிடுவதைப்பற்றிக் கருதிப்பார்க்கப்படும்.

Gurjun Plantations

* 110. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are gurjun plantations in this State; and

(b) if so, the details thereof?